# ஜாமக்காரன்
# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 12**

**DECEMBER 2023 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜாமக்காரன் JAMAKKARAN



கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்கள் யாவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள். நான் தொடர்ந்து கன்வென்ஷன்களில் பிரசங்கிப்பதை அறிந்து தங்கள் சந்தோஷத்தை தெரிவித்து உங்களைப்போன்ற வேதத்தை விளக்கிச் சொல்லிகொடுக்கும் வேதாகம ஆசிரியர்கள் பெருக வேண்டும். நீங்கள் எங்களுக்கு வேண்டும்.

ஆகவே சுமார் 100 வருடங்களாவது பெலத்தோடும், ஆரோக்கியத்தோடும் வாழ வேண்டும் என்று ஜெபிக்கிறோம். வாழ்த்துகிறோம் என்று ஏராளமானவர்கள் தங்கள் வாழ்த்தையும், அன்பையும் பகிர்ந்துகொண்டார்கள். நீங்கள் காட்டிய அன்புக்கும், ஜெபத்துக்கும் வாழ்த்துதலுக்கும் நன்றி. நீங்கள் பேசியதும், எழுதியதையும் கண்டு நெகிழ்ந்து போனேன். கர்த்தர் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக.

வரும் புதிய வருடம் 2024 வாசகர்கள் யாவருக்கும் புதிய ஆவிக்குரிய மாற்றங்களையும், சுகத்தையும், வருமான பெருக்கத்தையும் கர்த்தர் அருளுவாராக என் வாழ்த்தி ஜெபித்து முடிக்கிறேன்.

**- Dr. Pushparaj**

# DECEMBER - 2023



# சந்தோஷம் தரும் சுவிசேஷம்

மழை வெளிச்சம் ஆகிய இன்றியமையாதவைகளை இலவசமாக்கிய கர்த்தர் அந்த இன்றியமையாத சந்தோஷ சமாதானம் என்பதையும் இயேசு என்ற நாமத்தில் மனிதருக்கு **இலவசமாக்கினார்.** அதை ஏற்கும் நாள் வரை சந்தோஷம், சமாதானம் என்பது மனிதருக்கு கிட்டுவதே இல்லை என்பதை தெளிவுபடுத்துவதே இந்தக் கட்டுரை.

ஒரு வேளை உங்களில் சிலர்

பாபி மக்பெரின் (Bobby Mc Ferin) என்பாரைக் குறித்து அறிந்திருக்கலாம். அமெரிக்கரான அவர் சிறந்த பாடகர், பாடல் எழுதுவதிலும் வல்லுனர். அவர் எழுதிய பாடல்களில் தனிச்சிறப்பு பெற்ற பாடல் :

கவலைப்படாதே சந்தோஷமாயிரு (Don't Worry. Be happy) என்ற பாடலாகும். அவரது நாட்டின் அத்தனை நாவும் அந்தப் பாடலைப்பாடியது. 1986வது வருட அமெரிக்க அதிபதி தேர்தலில் **ஜார்ஜ் W. புஷ்** அவர்களின் தந்தையான ஜார்ஜ் **H.W. புஷ்** அவர்கள் போட்டியிட்டபொழுது இந்தப் பாடலைத்தான் அவரது தேர்தல் பிரச்சாரத்திற்கு கருத்துபாடலாக (Theme Song) வைத்திருந்தார்கள். அவ்வளவு அதிகமாக அகில உலகத்தையும் கவர்ந்த அந்தப் பாடலோ எழுதியவனுக்கு அர்த்தமுள்ளதாகவும் ஆனந்தம் அருளுவதாகவும் மாறவில்லலை!

**பாபி மக்பெரின்**

கவலைப்படாதே சந்தோஷமாயிரு – என்ற பாடலை பாடியவன், பரப்பியவன், ஓர் நாள் **தற்கொலை** செய்து உயிரைவிட்டான். உலகில் இன்றுள்ள 245 நாடுகளில் எந்த நாட்டிலும் சந்தோஷமோ, சமாதானமோ இலலை ! நமது அருகாமையிலுள்ள நாடுகளில் ஒன்று **மாலத்தீவு.** அண்டை நாடுகளில் **மிகச் செல்வந்தமான நாடு இதுதான்!** ஆயினும் அங்கு யாருக்கும் சந்தோஷம் இல்லை !

30 ஆண்டு தனி நபர் ஆட்சிக்குப்பின் சமீபத்தில்தான் சுதந்தரமாக தேர்தலை நடத்துயது. ஓர் புதிய ஜனாதிபதி வந்திருக்கிறார் – ஆனாலும் சந்தோஷம் இல்லை ! அவர்களுக்கு இருக்கும் பயம் **மாலத் தீவே கடலுக்குள் போய்விடும் என்பதே!** சுமார் 1200 சிறு சிறு

தீவுகளாகச் சிதறிக் கிடக்கும். இந்த நாட்டின் நான்கு லட்சம் மக்களுக்குள்ளும் பயம். பிறிதொரு **சுனாமி** வந்தால் எத்தனை தீவுகள் **மறைந்து போகுமோ** என்பதே! ஏனெனில் **கடந்த சுனாமியில்** பல தீவுகள் கடலாகிவிட்டன ! **கடல் மட்டத்திலிருந்து** மூன்றே மூன்று அடி **உயரமே இருக்கும் மாலத்தீவு.** தன் ஜனங்கள் அனைவரையும் **பிறிதொரு** இடத்தில் குடியேற்றி **ஓ ர் செயற்கை மாலத்தீவு அமைக்க விரும்புகிறார்கள்** என்பதை செய்திகளில் படித்திருப்பீர்கள்.

சுருங்கச் கூறின், தனி நபரிடமோ, குடும்பத்திலோ, ஊரிலோ தேசங்களிலோ இன்று சந்தோஷம், சமாதானம் என்பது இல்லை. இயற்கையின் சீற்றம் மனிதரின் சீற்றம், அதோடு **தான் செய்யும் குற்றம்** என்று அனைத்தும் சந்தோஷத்தைக் சாகடிக்கின்றது !

இந்த சந்தோஷம் என்பதை எனக்கும், இதை வாசிக்கும் உங்களுக்கும் உலகின் அத்தனை பேருக்கும் தருவதற்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். அவர் ஒருவரிடமே சந்தோஷம் உண்டு என்பதை தெரிவிக்கவே இந்த கட்டுரை

## என்னுடைய சந்தோஷம் என்றார் இயேசு (யோவான் 15:11)

பிரியமானவர்களே, **மெய்யான சந்தோஷம்** வேறே **பொய்யான** சந்தோஷம் வேறே, **சிற்றின்பம்** வேறே, **பேரின்பம்** வேறே, **அற்ப நிமிஷத்து** ஆனந்தம் வேறே, **நித்தியானந்தம்** வேறே, **மெய்யான** சந்தோஷம் என்பது உலகத்தின் அத்தனை சந்தோஷங்களுக்கும் அப்பாற்பட்டது! **மோசேக்கு** முட்செடியில் கண்ட சந்தோஷம் **மன்னன்** வீட்டிலும் இல்லை. மாமா வீட்டிலும் இல்லை! **அநித்தியமான பாவ சந்தோஷங்கள்** (எபி . 11:25) என்று மோசே மற்ற அத்தனை சந்தோஷங்களையும் தொலைவில் எறிந்தான் ! ஆதியாகமம் மூன்றில் **ஏவாளிடமும்** லூக்கா 4:6,7ல் **இயேசுவிடமும்** பிசாசு கூறியது யாவும் அநித்தியமான சந்தோஷங்களே! அவைகளை அறிந்தவரான இயேசு அவைகளில் விழுந்தவர்களை தூக்கியெடுத்துத் கொடுப்பதே அந்த **மெய்யான சந்தோஷத்டிதை கொடுக்கிறார்.! என்னுடைய சந்தோஷத்தையே** தருகிறேன் என்று கூறுகிறவரே **இயேசு!** மெய்யாகவே அவர் மனித துக்கங்களை தான் ஏற்றுக்கொண்டு **தேவ சந்தோஷத்தை** நமக்குத் தருகிறார் !

பிரியமானவர்களே !

உலகின் மனிதர்களுக்கு வேத வாக்கியங்களை அறியுமுன்வரை தப்பான இன்பங்களையே அனுபவித்தார்கள், வசன விவரங்களை அறிந்துவிட்டால், **மெய்யான சந்தோஷங்களே!** அதுவே கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து** கூறும் **என் சந்தோஷம் என்பதாகும்.** **ஆம் அது பாவ மன்னிப்பின் சந்தோஷம்!**

பிரியமானவர்களே!

**பண்டிகை** சந்தோஷம் வேறே, **பாவ மன்னிப்பின்** சந்தோஷம் வேரே !

பண்டிகை சந்தோஷம் எல்லாருக்கும் உண்டு. ஆனால் பாவ மன்னிப்பின் சந்தோஷம் இயேசுவை **இருதயத்தில் கண்டவருக்கே உண்டு.** ஆடைகள், அலங்காரங்கள், உணவுகள் விருந்துகள், இன ஜன பந்துக்கள், மனித கூட்டங்கள், வேட்டுகள் வேடிக்கைகள் என்று பண்டிகை தரும் பற்பல சந்தோஷங்கள் உண்டு. ஆனால் பண்டிகை முடிந்தவுடன் இந்த சந்தோஷங்களும் முடிந்துவிடும். **மெய்யான சந்தோஷம்** நிரந்தரமானது. அது இதயம் சார்ந்தது.

சுகமாயிருக்கிறீர்களா என்று கேட்டால் பதில் வாயிலிருந்து வரும். ஆனால் சந்தோஷமாக இருக்கிறீர்களா என்ற கேள்விக்கு **இருதயமே** பதில் கூற முடியும்!

இதயம் நாற்றம்கொண்டால் **தோஷம்,** சுத்தமானால் **சந்தோஷம்!** எல்லோரும் பாவம்செய்து ஏகமாய்க் கெட்டுப்போன ஓர் உலகில் பாவத்தை மன்னிக்கும் அதிகாரியான கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து** ஒருவரிடமே மனிதன் எதிர்பார்க்கும் **சந்தோஷம்** உண்டு! அதுவே **பாவ மன்னிப்பின் சந்தோஷம்!** இதற்க்காகத்தான் தாவீதின் உள்ளம் ஏங்கியது! உமது இரட்சண்யத்தின் சந்தோஷம் (சங்51:12) எனக்கு வேண்டும் என்று தாவீது கதறினார். தேவனும் வழங்கினார் இதைத்தான் பேதுருவின் இதயமும் கெஞ்சியது! அதை இயேசு தம் **முகப்பார்வையில்** அவனுக்கு வழங்கினார் !

பாவங்களை மன்னிக்கிறதற்கு **இவன் யார்** என்று பகடி செய்தவர்கள் உண்டு, **இயேசுவே எங்கள் எல்லைகளை விட்டுப்போய்விடும்** என்று கூறியவர்களும் உண்டு. ( உலகில் அன்றும் இன்றும் இயேசுவை **சற்றும் விரும்பாத அநேகர் உண்டு,** அதனால் இயேசுவிக்கு எவ்வித இழப்பும் இல்லை, அவர்களுக்குத்தான். இழப்பு பாவ மன்னிப்பின் சந்தோஷத்தை இழந்துவிடுவார்கள். இதை வாசிக்கும் நீங்கள் பாவ மன்னிப்பின் சந்தோஷத்தை பெற்றிருப்பீர்கள் என்றால் உங்களுக்குப் மற்றொரு சந்தோஷமும் உண்டு ! அதுதான் **பரிசுத்த ஆவியானவரால்** உண்டாகும் சந்தோஷம் என்பதாகும். (ரோமர் 14:17)

பரிசுத்த ஆவியானவர் என்றால் **பெருக்கம்** என்பதை மறவாதேயுங்கள் பாவ மன்னிப்பின் சந்தோஷம் என்றால் **இதய சுத்தம்** என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவரால் உண்டாகும் சந்தோஷம் என்றால் இதயத்தில் **ஆவியானவரின் பெருக்கம்** என்பதாகும்! அந்தப் பெருக்கத்தினால் இயேசுவின் மேல் **விசுவாசம்** பெருகும், **அன்பு** பெருகும். **பரிசுத்தம்** பெருகும் கழுகுகளைப்போல் **பெலன்** பெருகும் ஊழியங்களில் , சபைகளில் **ஆத்துமாக்கள் பெருகும்.** ஈசாக்கு கண்டதுபோல பெருளாதாரம் **நூறு மடங்கு பெருகும்!** பெருக்கம் 30,60, 100 என்று ஏறுமுகமாகவே இருக்கும் ! ( சரிவே இருக்காது)! **பங்குச் சந்தைகள்** சரிந்துவிடும். இயேசுவைக்

கண்டவருக்ளுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது! தொடர்ந்து வேறோரு சந்தோஷமும் உண்டு. அது **பரலோகத்தின் பதிவேட்டில்** என் பெயர் உண்டு **என்ற சந்தோஷம்** ஆகும். (லூக்கா.10:20)

அந்த நாட்களில் ஒரு தேசத்தில் பிறந்த குடிமக்கள் ஒவ்வொருவரின் பெயரும் பிறந்த இடம், நாள், பெற்றோர் விபரமும் ஒரு பதிவேட்டில் மிகவும் கவனமாக, தெளிவாகக் குறித்துவைகப்படும். அதில் யாராவது ஒருவர் ஏதாவது ஒரு குற்றத்தில் நிரூபிக்கப்பட்டால் சித்திரவதை செய்து கொன்றுவிடுவார்கள். பின்னர் அந்தப் பதிவேட்டை திறந்து அவர்களை பெயரை கிறுக்கி கிறுக்கி பின்னர் அழித்துவிடுவார்கள். உங்களுக்குத் தெரிந்திருக்கும் அக்டோபர் 30, 2008 அன்று அசாமில் இடம்பெற்ற குண்டுவெடிப்பை பற்றி 80க்கும் அதிகமானவர் மாண்டார்கள்! அதில் **பூடான் நாட்டின் மிக முக்கியப்பிரமுகர்** ஒருவரை அசாம் அரசு கைதுசெய்தது! இந்த விவரம் பூட்டான் மன்னருக்கு அறிவக்கப்பட்டது. அதற்கு **பூடான் மன்னர்** கொடுத்த பதில் அவனை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் **பூடானிடம் ஒப்படைக்காதீர்கள்.** ஒப்படைத்தால் அவனை நாங்கள் **சித்திரவதை செய்து கொன்று** அவன் பெயரையே **அழித்துவிடுவோம்.** என்பதே!

**பரலோகத்தின் பதிவேட்டில்** பெயர் உண்டு என்பாருக்கு அது **கிறுக்கப்படாமல், அழிக்கப்படாமல்** இருக்கும் மட்டும் பாவ மன்னிப்பின் சந்தோஷம் நிலைத்திருக்கும், இதையே வெளிப்படுத்தல் 3:5 கூறுகின்றது. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும். அவனை **ஜீவ புஸ்தகத்திலிருந்து** அவனுடைய நாமத்தை **நான் கிருக்கிப்போடாமல்** என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் என்று இயேசு கூறினார்.

பிரியமானவர்களே !

சுவிசேஷம், தரும் சந்தோஷம் எல்லா சந்தோஷங்களுக்கும் மேலான சந்தோஷம். ஏனென்றால் அது **இயேசு வழங்கும்** சந்தோஷம். **பாவ மன்னிப்பின்** சந்தோஷம். **பரிசுத்த ஆவியின்** சந்தோஷம். பரலோகத்தின் பதிவேட்டில் பெயர் உண்டு என்ற சந்தோஷம் எத்தனை ஆசீர்வாதமானது!

அத்தனை வலுவுள்ள சந்தோஷத்தை தரும் இயேசுவை இறுகப்பற்றிக்கொள்ளுங்கள் அத்தனை வல்லமையுள்ள சுவிசேஷத்தை அனைவருக்கும் பறைசாற்றுங்கள்! ஏனென்றால் சுவிசேஷ ஊழியத்தில் மிகவும் பிரயாசப்படுகிறவர்களின் நாமங்கள் தேவனுடைய ஜீவ புஸ்தகத்தில் பதிவாகின்றது) (பிலிப்பியர் 4:3) என்பதை வாசிக்கும் பொழுது எத்தனை சந்தோஷம்

பிரியமானவர்களே ! உங்களுக்கு **சுவிசேஷம் தரும்** சந்தேஷம் வரும் 2024 புது **வருடத்தில் மட்டுமல்ல** வாழ்க்கை முழுவதும் இருப்பதாக. ஆமென்.

# சனாதனம்

## இந்தியாவில் **பிரிட்டிஷ்காரர்கள்** செய்த புரட்சி
## &
## தமிழ்நாட்டில்
## **தந்தை பெரியார்** **அறிஞர் அண்ணா** செய்த புரட்சி

வாசகர்கள் முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது இந்தியாவில் வியாபாரம் என்ற பெயரில் **கிழக்கிந்திய கம்பெனி** என்ற பெயரில் பிரிட்ஷ்காரர்கள் பலர் இந்தியாவின் கணிமவளங்களான **தங்கம், வைரம், ஏலக்காய், மிளகு, தாமிரம்** ஆகியகைளை உலக நாடுகளில் விற்று பெரும் கொள்ளையடித்தனர், இவர்கள் யாரும் கிறிஸ்தவர் அல்லாதவர்கள் ஆகும். ஆகவேதான் **சீகன்பால், வில்லியம் கேரி** போன்ற மிஷனரிகளை இந்தியாவின் உள்ளே வர விடாமல் தடுத்தார்கள். மிஷனரிகள் வந்தபின் **கிழக்கிந்திய கம்பெனி** வெள்ளையர்களால் **ஒதுக்கப்பட்டு** பிரிட்டன் **அரசி விக்டோரியா மகாராணியின்** பிரதிநிதிகள் இந்திய நாட்டை **ஆளத்தொடங்கினர்** அதன்பின்தான் கீழ்க்காணும் மாற்றங்கள் நிகழ்ந்தன.

### பிரிட்டிஷ்ஸார் vs பிராமணர்கள்

**பார்ப்பணன்** மட்டுமே **கல்வி கற்க உரிமை உள்ளவன்** எனவும்!
**சத்திரியன்** மட்டுமே **நிலம்** வைத்துக்கொள்ள மற்றும் **அரசனாக** இருக்க முடியும் எனவும் !
**வைஸ்யன்** மட்டுமே **வியாபாரம்** செய்ய உரிமை உள்ளவன் எனவும்,
**சூத்திரன்** என்பவன் இவர்களுக்கு **அடிமையாக** இருந்து வேலை செய்ய வேண்டும் எனவும் இருந்த **பிராமணர்களின் மனுதர்ம சட்டத்தை** பிரிட்ஷ்சார்கள் ஏற்றுக்கொள்ளாமல் **சட்டம்** என்றால் **அனைவருக்கும் சமமாக** இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் 1773ம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் அரசு பல புதிய சட்டங்களை இயற்ற தொடங்கியது,

**சத்திரியர்கள்** மட்டுமே **சொத்து வைத்துக்கொள்ள உரிமை** என்று இருந்ததை 1795ம் ஆண்டு **அனைவரும் சொத்து வாங்கிக்கொள்வதற்கான** உரிமை வெள்ளையர்களால் வழங்கப்பட்டது, 1984ம் ஆண்டில் **பெண் சிசு கொலை** தடுப்புக்கான அரசாணை **வெள்ளையரால்** வெளியிடப்பட்டது. 1813ம் ஆண்டு **கொத்தடிமைகள்** ஒழிப்பு சட்டம் வெள்ளையரால் கொண்டுவரப்பட்டது.

**பிராமணப்** பெண்ணை கெடுத்த **சூத்திரர்** கொல்லப்பட வேண்டும் என்ற பிராமணர்களின் **மனு சாஸ்திர சட்டம்** VII 374, 375 **வெள்ளையர்களால் நீக்கப்பட்டது. பிராமணன்** ஒரு பெண்ணை கற்கழித்து **கொன்றால்** அது **கொலையல்ல என்ற சட்டமும்** வெள்ளையர்களால் நீக்கப்பட்டது.

அதே சமயம் ஒரு பிராமணன் காம ஆசை தீர **சூத்திர பெண்ணோடு** உறவு வைத்து கொள்ளலாம், ஆனால் அதன் விளைவாக **குழந்தை பிறந்து** உயிரோடு இருந்துவிட்டால் அது பிணம் போன்றதே ஆகும்.

பிராமணன் அதே தப்பு செய்தால் அவனுக்கு **தண்டனை இல்லாமல்** இருந்த நிலையில் **பிராமணர்கள் குற்றம்** புரிந்தவர்களாயிருப்பின் **அவர்களும் தண்டனை** பெறுவதற்கான அரசானை 1817ம் ஆண்டு **பிரிட்டிஸாரால்** கொண்டு வரப்பட்டது.

**சூத்திர பெண்** திருமணம் முடிந்த அன்றே **பிராமணர்களுக்கு** சகல பணிவிடை களையும் செய்ய அவள் 7 நாட்கள் கோவிலில் இருக்க வேண்டும் **என்ற கொடுமை** பிரிட்டிஸாரின் அரசானை மூலம் 1819ம் ஆண்டு முடிவிற்கு வந்தது.

**பார்பணன் மட்டுமே கல்வி** கற்க முடியும் என்ற நிலையில் இருந்த **பிராமண இன வெறியான மனுசாஸ்திர சட்டத்தை** 1835ம் ஆண்டு Lord **லார்டு மெக்காலின்** அவர்களின் சீரிய முயற்சியின் விளைவாக **சூத்திரனும்** கல்வி கற்கலாம் என்ற அரசானை வெளியிடப்பட்டது. **சூத்திரனுக்கு** முதலில் பிறக்கின்ற **ஆண் குழந்தையை** கங்கா நதியில் தள்ளிவிட்டு **கொலை செய்ய வேண்டும்** என்ற **கங்கா தானம்** என்ற **பயங்கரவாதம்** 1835ல் பிரிட்டீஷ் அரசானையின் மூலம்முடிவிற்கு வந்தது. 1935ம் ஆண்டு **சூத்திரர்களும் நாற்காலியில்** உட்காருவதற்கான அரசானை **வெள்ளையர்களால்** கொண்டு வரப்பட்டது, 1968ம் ஆண்டு பிரிட்டீஸ் அரசாங்கம் பிராமண **மனு சாஸ்திர சட்டத்தை முழுமையாக தடை செய்ய உத்திரவு பிறப்பித்தது,**

பெண்களின் **முலை** வரி கொடுமை, ஆண்களின் **மீசை** வரி கொடுமை, **துண்டு** வரி கொடுமை, **தங்க தாலி** வரி கொடுமை, தெய்வ குற்ற **நரபலி** கொடுமை, **பணை வரி** கொடுமை, உடன் கட்டை ஏறுதல் என்ற பலவித **பெண் வன்கொடுமைகளை** நீக்கி சட்டம் இயற்றி **பிராமணன்** அல்லாதவர்களுக்கு ஆங்கில அரசின் முயற்சியால் பிற்காலத்தில் 19ம் நூற்றாண்டு இறுதியில் இவையெல்லாம் தடை செய்யப்பட்டது.

அங்கு ஆண்களுக்கு **மீசை** வரியும் உயர் ஜாதியினர் தவிர எல்லாரிடமும் வசூலிக்கப்பட்டது,. இதனால்தான் **சுவாமி விவேகானந்தர்** இந்தியா முழுவதும் சுற்று பயணம் செய்த பின்னர் **இந்தியாவை** Mad asylum of caste **என கண்டித்தார்.**

இந்தியாவை மட்டும் பிரிட்டீஸ்சார் ஆள வில்லை என்றல் **திராவிட தமிழர்களுக்கு** கல்வி இல்லாமல் போயிருக்கும், அப்படி போயிருந்தால் **ஜோதி ராவ் பிளேவுக்கு** கல்வி

கிடைத்திருக்காது. இந்தியாவில் **கல்வி இயக்கம்** நடந்திருக்காது. அண்ணனில் தந்தை **ராம்ஜி** அவர்களுக்கு **கல்வியும், ராணுவ பணியும்** கிடைத்திருக்காது, இவையெல்லாம் இல்லாமல் போயிருந்தால் **அம்பேத்கார் இல்லை.** அம்பேத்கார் இல்லை என்றால் B.C., M.B.C., & S.C. ஆகிய தலித்கள் இல்லை.

**சூத்திர பஞ்சமணி** அடிமை என்ற **சங்கிலியை** உடைத்த பிரிட்டீஷாரின் நவீன முன்னேற்ற நற்பணிகள் பாராட்டுக்குரியதே. வெள்ளையனே வெளியேறு என்று கூறிய நாம் மேற்கண்ட அற்புதமான நவீன கொள்கைகளுக்கும் **பிராமணரின் மனுசாஸ்திரங்களிலிருந்து நமக்கு விடுதலைபெற்று கொடுத்த** வெள்ளையர்களுக்கு கைகூப்பி நன்றி கூறாமல் இருக்க முடியாது.

1) உலகில் உள்ள அனைத்து நாடுகளும் வல்லரசு நாடுகளுடன் நல்லுரவை ஏற்படுத்த **ஒரே பாலின திருமணத்தை** (பெண் + பெண் & ஆண் + ஆண்) ஏற்க வேண்டும் என அமெரிக்க உறுதி செய்துள்ளது,

தற்போது 34 நாடுகளில் **ஒரே பாலின திருமணம் சட்டப்பூர்வமாக** உள்ளது, அண்டோரா,அர்ஜென்டினா, ஆஸ்திரேயா, பெல்ஜியம், பிரேசில், கனடா, சிலி, கொலம்பியா, கோஸ்டாரிகா, கியூபா, டென்மார்க், ஈக்வடார், பின்லாந்து, பிரான்ஸ்,ஜெர்மனி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, லக்சம்பர்க், மால்டா, மெக்சிகோ, நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, போர்ச்சுகல், ஸ்ரோவேனியா, தென் ஆப்பிரிக்கா, ஸ்பெயின், சுவீடன், சுவிட்சர்லாந்து, தைவான், யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் உருகுவே. ஆகிய நாடுகளில் ஒரு ஆண் மற்றொரு ஆண் அல்லது ஒரு பெண் மற்றொரு பெண்ணை விவாகம் செய்யலாம் என்ற சட்டம் கொண்டுவந்தது.

2. இனி **தாம்பத்தியம்** இல்லை என்று அறிவிக்கும் சட்டத்தில் **ஜெர்மனி** கையெழுத்திட்டுள்ளது, அதாவது **அண்ணனும்** கூட பிறந்த சொந்த சகோதரியும் திருமணம் செய்து கொள்ளலாம். **அம்மா** மற்றும் மகன், அப்பா மற்றும் மகள் போன்றவர்கள் தாம்பத்திய உறவு கொள்ளலாம் என்ற **தெய்வம் அறுவருக்கும் சோதோம் – கொமாரா** நாட்டில் பின்பற்றிய பாவம் பல நாடுகளில் இப்போது சட்டம் ஆக்கப்பட்டது.

3. **மியாமி** நகரம் இப்போது **பொது செக்ஸ்** வாங்கும் நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பொது வழியில் **தேவாலயத்திற்கு** அருகில் **மசூதியில், சந்தையில் கால்பந்து** மைதானத்தில் உங்களுக்கு **செக்ஸ்** தேவைப்பட்டால் எந்த **நேரத்திலும்,** எந்த **இடத்திலும் எந்த பிரச்சனையும் இல்லாமல்** செக்ஸ் வைத்துக்கொள்ளலாம். அதை மனிதர் நடமாடும் பொது இடத்தில்கூட வெட்கம், மானம் இல்லாமல் Sex அனுபவிக்க முடியும்.

**4. கனடா** நாட்டில் மிருகத்தோடு சரீர உறவை வைத்துக்கொள்ள அனுமதித்துள்ளது (விலங்குகளுடன் உடலுறவு).

5. **ஸ்பெயினில்: (SEX)** சினிமா படங்கள் **உயர்நிலைப் பள்ளி** மற்றும் **பல்கலைக் கழகங்களில்** அனுமதிக்கப்படுகின்றன.

6. **சிறார்களின்** விபச்சாரத்திற்கு **அங்கீகாரம்** வழங்கப்பட்டுள்ளது. **10 வயதில்** எந்தவொரு இளம் பெண்ணும் **பாலியல் இன்பத்தை** உணர்கிறாள் என்று **மார்க் லூக்கர்** கூறுகிறார். அதனால் யாரும் அவளை தடுக் கூடாது, பாதுகாக்க கூடாது. அவளது உடல் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் அவள் உணர்வுகளே கண்டறியும்.

7. இறுதியாக அமெரிக்காவில் **சாத்தானிய தேவாலயங்களை** பகிரங்கமாக திறக்க அனுமதித்தது.

அன்பான சகோதர சகோதரிகளே உலக முடிவு நெருங்கிவிட்டது மகிமையில் புறப்பாடு நெருங்குகிறது. **மக்கள் திசைதிருப்பப்படுகிறார்கள்** மற்றும் தெய்வீக கருணையிலிருந்து அவர்களை அகற்றுவதற்காக அதிகபட்ச எண்ணிக்கையிலான ஆன்மாக்களை **தன்னுடன் இழுக்க பிசாசு விரும்புகிறது.** கவனமாக இருப்போம்.

நாம் **தேவாலயங்களில்** தூங்குகிறோம். ஆனால் **மதுக்கடையில்** விழித்திருக்கிறோம்? இயேசுவைப் பற்றி பேசுவது ஏன் மிகவும் கடினமாக உள்ளது.? ஆனால் **வதந்திகள்** மட்டும் பேசுவது ஏன்? கடவுளிடமிருந்து வரும் செய்திகளைப் புறக்கணிப்பது ஏன்?

**பாலியல்** ஒழுக்கக்கேடு தற்போது உலகை நாசமாக்குகிறது. கடவுள் சொன்னார் : மனித குலம் **ஐந்து விஷயங்களை** விரும்பி **ஐந்து விஷயங்களை** மறந்துவிடும் ஒரு காலம் வரும்

1. அவர்கள் இவ்வுலகின் **இன்பத்தை விரும்பி** நியாயத்தீர்ப்பு நாளை **மறந்துவிடுவார்கள்.**

2. அவர்கள் **பணத்தை விரும்பி** பணத்தை எப்படிச் சம்பாதித்தார்கள், எப்படிச் செலவு செய்தார்கள் என்று **கணக்குப் போடும் நாளை மறந்துவிடுவார்கள்.**

3. **படைக்கப்பட்ட பொருட்களை** கண்டு பயந்து **படைப்பாளனை மறந்து விடுவார்கள்.**

4. அவர்கள் **அழகான மாளிகைகளை** விரும்புவார்கள், தங்கள் **கல்லறைகளை** மறந்துவிடுவார்கள்.

5. அவர்கள் **பாவங்களை விரும்பி** கடவுளிடம் **மன்னிப்பு தேட மறந்து விடுவார்கள்.** இதை யோசிக்கலாமா?

| | | |
|---|---|---|
| 1. நித்திய ஜீவன் | = | இலவசம் |
| 2. சர்ச் நுழைவு | = | இலவசம் |
| 3. கிறிஸ்துவின் இரட்சிப்பு | = | இலவசம் |
| 4. தேவனின் அன்பு | = | இலவசம் |
| 5. உயிர் மூச்சு | = | இலவசம் |

1. சிகரெட் = ஊதியம்
2. விபச்சாரம் = ஊதியம்
3. மது = ஊதியம்
4. நைட் கிளப் நுழைவு கட்டணம் = ஊதியம்
5. உலகை ஆளும் அதிகாரங்கள் = ஊதியம்

**பரலோகம் இலவசமாக** இருக்கும்போது மக்கள் ஏன் **நரகத்திற்கு பணம் செலுத்துகிறார்கள்?** ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க **கிறிஸ்துவை விசுவாசியுங்கள்** அப்போது **இரட்சிக்கப்படுவீர்கள்.** ஆனால் நாம் எப்போதும் **காதலர் தினத்தை** நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| பிறந்த நாள் | தந்தையர் தினம் | அன்னையர் தினம் | குழந்தைகள் தினம் |
| உழவர் தினம் | ஆசிரியர் தினம் | கிறிஸ்துமஸ் தினம் | சுதந்திர தினம் |
| இந்த நாள் | அந்த நாள் | டே இன் | டே அவுட் |
| குத்துச்சண்டை தினம் | | | |

நீங்கள் எப்போதாவது **மரண** நாள் மற்றும் **நியாய தீர்ப்பு** நாள் பற்றி யோசித்திருக் கிறீர்களா ? இது உங்களுக்கு **கொண்டாட்டத்தின் நாளா** அல்லது **கண்டன நாளாக** இருக்கப் போகிறதா? நீங்கள் பாதுகாப்பாக இருந்தால் உங்கள் நண்பர்கள் மற்றும் அன்புக்குரியவர்களிடம் மரண நாள் மற்றும் நியாய **தீர்ப்பு** நாள் பற்றி அவர்களிடம் கூறி கிறிஸ்துவின் அன்பையை காட்டுங்கள் இன்று உங்களுக்கு சொர்க்கம் மகிழ்ச்சியாக இருக்கட்டும். தயவுசெய்து மேலே எழுதியவைகளைப்பற்றி தாமதமில்லாமல் இப்போதே மற்றவர்களுக்கும் கூறிவிடுங்கள் பின்னர் சொல்லமுடியாது. இப்போதே செய்யுங்கள் எனென்றால் நாளை மிகவும் தாமதமாகலாம்.

இதை வெளியிடும் நான் **மரண நாளுக்கும்** ஆயத்தமாக இருக்கிறேன். **நியாய தீர்ப்புக்கும்,** கிறுஸ்துவின் **இரண்டாம் வருகைக்கும்** ஆயத்தமாக இருக்கிறேன். இதை வாசிக்கும் நீங்கள் ஆயத்தமா ?

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# ஆராதனை மாதிரி



இன்றைய கிறிஸ்தவ உலகில் பலவகையான **ஆராதனை முறைகள்** இருப்பதை நாம் பார்க்கிறோம். **கத்தோலிக்கர்கள்** தங்களுக்கே உரித்தான தனி வழியில் ஆராதிக்கின்றனர். **புராட்டஸ்டன்ட்** சபைகள் வெவ்வேறு வகையான முறைகளைப் பின்பற்றுகின்றன. அதாவது வித்தியாசப்பட்ட ஆராதனை முறைகள் அனைத்தையும் நீங்கள் காண விரும்பினால், வாரக்கணக்கில் பல இடங்களுக்கும் அங்குள்ள சபைகளையும் சுற்றி வரலாம். ஏன் இந்த நிலை ? இப்படி இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்பினாரா?

ஒரே **ஒரு சபை** தான் இருக்கிறது. அது **கர்த்தருக்கே சொந்தமானது** என்று வேதாகமம் கற்பிக்கிறது. (எபே. 4:1, மத். 16:18) அந்த **சபையின் மாதிரி** புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. இது உண்மையாக இருக்கும் வேளையில், நாம் ஆராதனை செய்ய வேதத்தில் கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய சபையாக இருக்குயோனல், **ஆராதனையும்** ஒரே மாதிரியாகத்தானே இருக்க வேண்டும்,

தம்மை மக்கள் இன்று எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார் என்பதை அறிய நாம் **புதிய ஏற்பாட்டுக்குத்தான்** செல்ல வேண்டும். அதை அறிய வேறு வழி எதுவும் இல்லை. ஆராதனையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை அங்கேதான் நாம் தெளிவாகத் கண்டுகொள்ள முடிகிறது. கீழ்கண்டவற்றை அது வெளிப்படுத்துகிறது.

### 1. தேவன் ஒருவரே ஆராதிக்கத்தக்கவர்.

உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துக்கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என பிசாசால் சோதிக்கப்படுகையில் பிசாசிடம் கிறிஸ்து கூறினார். (மத் 4:10)

### 2 வாரத்தின் முதல் நாள்தான் ஆராதனை நாளாக இருக்க வேண்டும்.

வாரத்தின் **முதல் நாள்** தோறும் சீடர்கள் தங்கள் வரவுக்குதக்கதாக சேர்த்து வைத்து கூடிவரக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு

உங்களில் அவனவன் வாரத்தின் முதல் தன்தன் வரவுக்குத்தக்கதாக நாள்தோறும் எதையாகிலும் தன் இடத்தில் சேர்த்து வைக்கக்கடவன் (1 கொரி 16:17) என்று பவுல் கூறுகிறார்.

## 3. கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்க வேண்டும்.

இதற்கு நமக்கு மூன்று காரணங்கள் உள்ளன. அன்றைய சீஷர்கள் **அப்போஸ்தாலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுகிற தலிலும்** உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப். 2:42) **வாரத்தின் முதல் நாளிலே,** அப்பம் பிட்கும்படி சீடர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்தது, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் (அப்.20:7)

## 4. நாம் எவ்வாறு ஆராதிக்க வேண்டுமென்று நமக்கு கூறப்படுள்ளது.

கிறிஸ்து கூறும்போது உண்மையாய்த் தொழுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும தொழுது கொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது, தம்மைத்தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்பினார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார் (யோவான் 4:23,24)

## 5. ஆராதனையின் ஐந்து செயல்களும் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

அவைகள்: வேதாகம போதனை ( 2 தீமோத்தேயு 2:5) ஜெபம் (அப். 2:42) பாடல் (எபே. 5:19) கர்த்தரின் பந்தி (மத்தேயு 26:26-28) கொடுத்தல் (2 கொரி 9:6,7) புதிய ஏற்பாட்டில் நாம் காணும் ஆராதனை முறைகள் இவை மட்டுமே. .எனவே நாம் இவைகளை மட்டுமே ஆராதனையில் கடைபிடிப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும்.

## 6. ஆராதனையில் கூடி வருவதில் தவறாதிருக்க நாம் அறிவுறுத்தப்படுகிறோம்.

சபை கூடிவருதலை சிலர் விட்டு விடுகிறதுபோல நாம் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்லவேண்டும் என **எபிரேய** எழுத்தர் கூறினார். (எப. 10:25)

## 7. ஆராதனை முறை எளிமையானதும், தேவையானதை மாத்திரம் கொண்டதுமாக உள்ளது.

ஆராதனையில் பங்கு பெறுவது யாருக்கும் கடினமானதல்ல. அவசியமற்ற சடங்குகள்

எதுவும் இல்லை. மாறாக, சகலரும் கலந்துகொள்ள எளிய முறைகளே உள்ளன. சகலரும் அழைக்கப்டுகின்றனர்.

## 8. ஆராதனை நிகழ்ச்சி முழுவதும் கர்த்தருயை வார்த்தையை அடிப்டையாகக்கொண்டது.

தேவனுடைய வாக்கியங்களின்படி மட்டுமே நாம் பேசுகிறோம் (1 பேதுரு 4:11) கர்த்தர் இவ்வாறாக கூறுகிறார் என்பதற்கு மாறாக எதுவும் செய்யப்படுவதில்லை.

1. **கிறிஸ்துவன் சபை** என்று அழைக்கப்படும் சபைகளில் **இசைக்கருவிகளை** ஆராதனையில் பயன்படுத்துவதில்லை. தேவனைப் புகழ்ந்து பாடவேண்டுமென புதிய ஏற்பாடு தெளிவாகக் கற்பிக்கிறது. சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி என பவுல் கூறுன்கிறார். (எபே. 5:19) பாடல் பற்றிய பாடத்தில் இது பற்றி மேலும் கூறுவோம்.

2. கர்த்தரின் பந்தியை நாங்கள் இரகசியமாக அனுசரிப்பதில்லை. மாறாக எந்த மனிதனும் **தன்னைத்தானே சோதித்தறிந்து,** இந்த **அப்பத்தில்** புசித்து, இந்த **பாத்திரத்தில்** பானம் பண்ணக்கடவன் என பவுல் கொரிந்தியருக்கு (I கொரி 11:28) எழுதியிருப்பதால், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள தடை விதிப்பதில்லை. (தகுதியில்லாமல் கர்த்தரின் பந்தியில் பங்குகொண்டால் மூன்று எச்சரிப்புக்கள் அல்லது தண்டனைகளும், முடிவும் கூறப்படுகிறது) முதலாம் எச்சரிப்பு பலவீனம் இரண்டாம் எச்சரிப்பு **வியாதி** மூன்றாவது எச்சரிப்பு அல்ல முடிவு அது மரணம் (I கொரி 11:30)


3. **தசமபாகம்** என்பதை நாங்கள் பின்பற்றுவதில்லை. **அவரவர் தங்கள்** வருமானத்திற்கு **ஏற்றவாறு கொடுக்க வேண்டும்** என பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதினார். ( 1 கொரி. 16:2)

4. **கர்த்தரின் நாளைத் தவிர** மற்ற நாட்களில் **காணிக்கை வாங்குவதில்லை.** வாரத்தின் முதல் நாளாக இருப்பினும் இல்லாவிட்டாலும் தாங்கள்கூடும் நேரங்களில் எல்லாம் பல குழுக்கள் காணிக்கை வசூலிக்கின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் **வாரத்தின் முதல் நாளில்** கொடுக்க கட்டளையிடப்பட்டுள்ளனர். (1 கொரி 16:2)

மேலே காணப்படுவது **கிறிஸ்துவின் சபை** என்று அழைக்கப்படும் சபையினர் கைக்கொள்ளும் உபதேசமாகும்.

# காந்திஜியை சுட்டுக்கொன்ற நாதுராம் கோட்சேவுக்கு

## கிடைத்த தண்டனை என்ன ?



1948 ஜனவரி 30ந் தேதி டெல்லி **பிர்லா மாளிகையில்** வழிபாட்டுக் கூட்டத்தில் பங்கேற்க வந்த **காந்தியை,** மிகக் குறைந்த தொலைவிலிருந்து சுட்டுக்கொன்ற **நாதுராம் விநாயக் கோட்சே,** என்பவன் RSS இயக்கத்தை சேர்ந்தவன். அவன் தப்பிக்கவும் முயற்சிக்கவில்லை, **தற்கொலை** செய்துகொள்ளவும் முயற்சிக்கவில்லை, அதனால் **துப்பாக்கியும் கையுமாகப்** பிடிபட்டான். கோட்சேவுடன் கொலைக்கு திட்டமிட்ட **நாராயண் ஆப்தே,** ஆயுத வியாபாரியான **திகம்பர் பாட்ஜே,** அவரால் பணியாளாக நியமிக்கப்பட்ட **சங்கர் கிஸ்தய்யா**. டாக்டர் **தத்தாரேய பர்ச்சூர்**. ஓட்டல் உரிமையாளர் **விஷ்ணு கார்கரே,** இந்திய, **பாகிஸ்தான்** பிரிவினையால் பாதிக்கப்பட்ட **மதன்லால் பவா,** கேட்சேவின் சகோதரர் **கோபல் கோட்சே,** இவர்களுடன் **சாவர்க்கரும்** கைது செய்யப்பட்டனர். இதில் அந்தப் பணியாள் தவிர மற்றவர்கள் இந்து மகா சபா என்கிற **இந்துத்வா அமைப்பைச்** சேர்ந்தவர்கள். (RSS என்ற தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள்.)



1948 மே மாதம் 27ல் தொடங்கியது **நீதிமன்ற விசாரணை.** 8 மாதங்களுக்குப்பிறகு நீதிபதி **ஆத்மாசரண்** 1949ம் ஆண்டு பிப்ரவரி 10ந் தேதி வழங்கிய தீர்ப்பில் **கோட்சேவுக்கும் நாராயண் ஆப்தேவுக்கும்** மரண **தண்டனை** விதித்தார். போதிய ஆதாரங்கள் இல்லாததால் **சாவர்க்கர்** விடுதலை செய்யப்பட்டார் மற்ற 6 பேருக்கும் **ஆயுள் தண்டனை** விதிக்கப்பட்டது . பஞ்சாப் உயர்நீதிமன்றத்தில் நடந்த மேல் முறையீட்டு வழக்கில் **காந்தி** கொலைக்கு **நான் மட்டுமே காரணம்** என்றும் **கூட்டுக் சதி** எதுவும் இல்லை என்றும் கோட்சே தெரிவித்தான். தனக்கான மரண **தண்டனையை** ஏற்பதாக தெரிவித்தார். மேல்முறையீட்டில் டாக்டர் **தத்தாரேய**

**பர்ச்சூரும்** பணியாளர் **சங்கர் கிஸ்தய்யாவும்** விடுவிக்கப்பட்டனர். **மரண தண்டனைக்** கைதிகளுக்கும் மற்ற **ஆயுள் கைதிகள்** நால்வருக்கும் **தண்டனை உறுதிசெய்யப்பட்டது**. காந்தியின் **மகன்கள் மணிலால், ராமதாஸ்** இருவரும் **மரண தண்டனையை** குறைக்க வலியுறுத்தினர். ஆனால் **பிரதமர் நேரு**, உள்துறை அமைச்சர் **பட்டேல்,** கவர்னர் ஜெனரல் **ராஜாஜி** ஆகியோர் அதை ஏற்கவில்லை. 1949 **நவம்பர்** மாதம் **கோட்சேவும் ஆப்தேவும்** தூக்கிலிடப்பட்னர்.

இதில் கொடுமை என்னவென்றால் பாரத தந்தை என்று போற்றப்படும் மகாத்மா காந்தியை சுட்டுக்கொன்ற **நாதுராம் கோட்சேக்கு** சிலை வைத்து **மணிமண்டபம்** அமைத்து R.S.S. இயக்கத்தின்னர் கொண்டாடி வருகின்றனர்.

இந்த தீவிரவாத இயக்கமாகிய R.S.S. உருவாக்கியதுதான் இப்போது இந்தியாவை ஆளும் BJP கட்சியாகும். இந்த BJPயில் உள்ள இப்போதுள்ள **பிரதமர் நரேந்திர மோடி** அவர்கள்தன் இந்திய பிரதமராகும். இவர்தான் இந்தியாவில் ஒரே மதம் - இந்து மதம். ஒரே பாஷை - இந்தி. ஒரே பொது சிவில் சட்டம் என்பதைக் நடைமுறைக்கு கொண்டுவர தீவிமாக முயலுகிறார்.

BJPக்கு பெரும்பான்மை மெஜாரிட்டி பார்லிமென்டில் இருப்பதால் இவர்களின் கொள்கையில் ஒன்றான **ராம ராஜ்யம்** ஸ்தாபிக்கப்படுவது. **இஸ்லாமியரின்** மசூதியை இடித்து தள்ளிவிட்டு அதே இடத்தில் **ராமர் கோவில்** கட்டி திறப்பு விழா நடத்தியது.

இனி 2024ல் பார்லிமென்ட் தேர்தலில் பூர்ண மெஜாரிட்டியடன் BJP ஜெயித்து வந்தால் அடுத்து அவர்களின் கொள்கையான மற்ற சிறுபான்மை மதத்தினரான **இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள்** போன்ற சிறுபான்மையினரை கொஞ்ச கொஞ்சமாக அழிப்பது அல்லது ஓரங்கட்டுவது என்பதாகும்.

**வட மாநிலங்களில்** கிறிஸ்தவ ஆலயங்களை தகர்ப்பது, **மணிப்பூரில்** நடந்துகொண்டிருப்பதுபோல **பெண்களை நிர்வாணமாக்கி** பொது வீதியில் இழுத்து வருவது. இது **கிறிஸ்தவர்களை** பயமுறுத்தி **தாய் மதத்துக்கு** அதாவது **இந்து மதத்துக்கு** திருப்புவது. இதன் காரணமாக லட்சக் கணக்கானவர்கள் வீடு இழந்து அனாதை ஆக்கப்பட்டனர்.

- ☐ மிஷனரி **கிரஹம்** அவர்களையும் அவரின் இரண்டு பிள்ளைகளையும் காருக்குள் வைக்கோல் துருத்தி கதர கதர தீயில் எரிக்கப்பட்டார்கள். எரித்தவன் தைரியமாக

கோட்சேவைப்போல் நான்தான் எரித்தேன் என்று தைரியமாக கூறியவனுக்கு **மரண தண்டனை தீர்ப்பு** வந்தபின் மேல்முறையிட்டில் அவனை **மரண தண்டனையிலிருந்து** விடுவித்த **நீதிபதிக்கு** அவர் ஓய்வு பெற்றபின் **கவர்னர் பதவியை** BJP அரசாங்கம் பரிசாக கொடுத்து கவுரவித்தனர்.

டெல்லியில் இஸ்லாமிய **பல்கிஸ் பானு** என்ற **கர்பிணி பெண்ணை** பலர் கூட்டாக கற்பழித்தார்கள். அவளுடைய 3வது குழந்தையை இரண்டு கால்களை பிடித்து அந்த குழந்தையை தரையில் அடித்தே கொன்றார்கள். மேலும் வீட்டில் இருந்த நான்கு முஸ்லீம் சகோதரர்களை கொன்றார்கள். அந்த 11 நபர்களையும் **நீதிமன்றம்** ஆயுள் தண்டனை தீர்ப்பு வழங்கியும் BJP அரசாங்க செல்வாக்கால் அவர்கள் யாவரும் **விடுவிக்கப்பட்ட கொடுமை,** துணிகரம் எந்த **ஜனநாயக** நாட்டிலாவது நடக்குமா? ஆனால் நம் இந்திய ஜனநாயக நாட்டில் நடந்தது. ஆனால் இப்போதுள்ள நம் இந்திய **சுப்ரீம்கோர்ட்** அந்த **தீர்ப்பு தவறு** என்று அறிவித்து அத்தனை பேர்களையும் **மறுபடியும் ஜெயிலில் அடைக்க கட்டளையிட்டது.** இந்திய மக்களின் கடைசி நம்பிக்கையான சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளுக்காக தேவனை துதிக்கிறேன்.

இவையெல்லாம் செய்ய BJP அரசாங்கம் பெரும் மெஜாரிட்டியில் மறுபயும் ஜெயித்து வந்ததால் இந்திய என்னவாகும்.

இதோ இந்திய மக்களுக்கு வேதனையை அனுபவிக்கும் சிறுபான்மையினரான இந்திய **கிறிஸ்தவர்கள். இஸ்லாமியர்களுக்கு** கடைசி சந்தர்ப்பம் வருகிறது. அதுதான் 2024 **மே மாதம்** வரும் **தேர்தல்**. இந்த தேர்தவில் **BJP அரசாங்கத்தையும் பிரதமர் மோடி** அவர்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் விட்டுவிட்டு BJP அரசியல்வாதிகளுக்காக ஜெபியுங்கள். **பிரதமர் மோடி** அவர்களும் கிறிஸ்துவின் **தொழுவத்தில்** வரவேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். அவர்கள் **அழிய வேண்டும்** என்று **ஜெபிக்க கூடாது. யுத்தம்** கர்த்தருடையது நீங்கள் **சும்மா இருக்கவேண்டும்** என்று நம் வேதம் கற்பிக்கிறது.

கிறிஸ்தவர்களை தேடி தேடி கொன்ற **சவுலையே** கர்த்தர் அவரை தன் **சிஷனாக (பவுலாக)** மாற்றியவருக்கு இவர்களெல்லாம் எம்மாத்திரம். ஒருவேளை இந்த தேர்தலிலும் BJP மறுபடியும் ஜெயித்தாலும் அவர்களை வெறுக்க கூடாது.

கர்த்தர் தான் நேசிக்கும் மக்களை கர்த்தரே **பார்வோனிடம், பெலிஸ்தியரிடம்** ஒப்புக் கொடுத்ததுபோல் நம் காலத்திலும் அப்படியே நடந்தால் அதுவும் நன்மைக்கே. அந்த நெருக்கத்தில் **உண்மை கிறிஸ்தவர்கள்** எழும்புவார்கள். ஆண்டவரின் நோக்கத்தை யார் அறிவார்? கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.

# CSI முன்னாள் மாடரேட்டர் அவர்களின் மரணம்

கடந்த 2023 வருடம் மே மாதம் 7ம் தேதி **கிழக்கு கேரளா** CSI திருமண்டல பிஷப்பும்



முன்னாள் CSI மாடரேட்டருமான M**ost Rev. K.J. சாமுவேல்** அவர்கள் சில காலம் வியாதி படுக்கையில் இருந்து தனது 81ம் வயதில் மரித்துப்போனார். இவர் பைபிள் சொசைட்டியின் Auxilary President ஆகவும் World Vision ஸ்தாபனத்திலும் பொருப் பாற்றினார்.

இவர் ஆயராக பணியாற்றியபோதே மாடரேட்டர் அவர்களிடம் எனக்கு பழக்கம் உண்டு. அவருடைய தாழ்மை, சுவிசேஷ ஊழியத்திலும் மிஷனரி பணியிலும் மிகவும் உற்சாகம் காட்டியது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. **கிழக்கு கேரளா CSI டையோசிஸ்** கன்வெண்ஷனில் **மேலுகாவு** (Idukki) இரண்டுமுறை பிரசங்கிக்க அழைக்கப்பட்டேன். அப்போதே என் மேல் அன்பும், தனி மரியாதையுடனும் பழகினார்.


**CSI மலபார்** டையோஸிஸ்ஸின் **மாத பத்திரிகையில்** மாடரேட்டர் அவர்களின் சிறப்பான செயல்களை குறித்து பல நல்ல விஷயங்களை எழுதினார்கள்.

மாடரேட்டர் அவர்களின் மரணத்தால் துக்கம் அனுபவிக்கும் குடும்பத்துக்கும் டையோசிஸ் ஆயர்கள், சபை அங்கத்தினர்களுக்கும் கர்த்தர் தாமே ஆறுதலை அளித்து பெலப்படுத்துவாராக .

East Kerala CSI டையோசிஸ் முதல் முதல் ஆரம்பித்த ஆரம்ப காலத்துக்கு முன்பே டையோசிஸ்ஸின் தொடர்புடைய பல சபைகளிலும் சிறு கிராம சபைகளிலும் கன்வென்ஷனில் பிரசங்கித்திருக்கிறேன். என் ஜாமக்காரன் பத்திரிகை வாசகர்கள் ஆயிரக்கணக்கில் இப்போதும் என்னோடு தொடர்பில் இருக்கிறார்கள். இன்று வரை அவர்களில் பலர் காணிக்கைகளினாலும், ஜெபத்தினாலும் என்னையும் என் ஊழியத்தையும் தாங்கி வருவதை குறித்து அவர்களை வாழ்த்துகிறேன். **Dr. புஷ்பராஜ்** என்ற பெயரில் தெய்வ வேலைக்காரனாக இந்த துக்க விவரத்தையும் அவரின் ஆரம்ப கால ஊழியங்களையும் புகழ்ந்து எழுதினேன்.

## ஜாமக்காரனின் விமர்சனம்

இனி **ஜாமக்காரன்** பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் மரித்த மாடரேட்டர் அவர்களைப்பற்றிய **விமர்சனமாக** என் புதிய தலைமுறை வாசகர்கள் அறிய வேண்டி மாடரேட்டர் அவர்களின் சாட்சியிழந்த சில விவரங்களையும் இந்த சமயத்தில் அறிவிக்க வேண்டியது அவசியமாகிறது. டையோசிஸ்ஸில் சில ஆயர்களுக்கும். பிஷப்மாருக்கும் சில சபை விசுவாசிகளுக்கும் என் இந்த விமர்சனம் நிச்சயம் இஷ்டம் இல்லாமல் போகும் என்பதை நான் அறிவேன்.




**Bro. K.P. Yogananan**

சில வருடங்களுக்குமுன் மாடரேட்டர் **K.J.சாமுவேல்** அவர்களின் ஆரம்ப கால ஊழிய நண்பரும் வானொலியில் **ஆத்மீக யாத்திரை** என்ற அருமையான நிகழ்ச்சியை நடத்தியவருமான சகோ. **K.P. யோகன்னான்** அவர்களை **பிஷப்பாக** அபிஷேகம் நடத்த **CSI சபை அதிகாரத்தை** தவறாக உபயோகித்தாரே, அது மாடரேட்டர் **K.J. சாமுவேல்** அவர்களுக்கும் CSI டையோசிஸ்க்கும் பெருத் தலைகுனிவாகும்.

இதற்கு மாடரேட்டர் அவர்கள் **பல கோடி ரூபாய்களை** நான்கு பிஷப்மாருக்கு லஞ்ஜம் கொடுக்க ஏற்பாடு செய்தாரே அது நீக்கமுடியாத பெரும் **பாவ கரையை** அவர்மேல் உண்டாக்கிவிட்டது.

ஐந்து பிஷப்கள் ஒரு ஆயர்மேல் கைத்து அபிஷேகித்தால்தான் ஒருவரை பிஷப் ஆக்கமுடியும். **மாடரேட்டர்** தெற்கு கேரளா டையோசிஸ்ஸின் பிஷப்பும் முன்னாள் மாடரேட்டருமான **Most Rev. கிளாக்ஸ்டன்** அவர்களுக்கு மட்டும் **12 கோடிகள்** லஞ்ஜம் கொடுக்கப்பட்டது. கன்னியாகுமரி CSI டையோசிஸ் பிஷப் அவர்களுக்கு **ஒரு கோடி** கொடுக்கப்பட்டது. **K.P. யோகன்னான்** அவர்கள் CNI வட இந்திய **பிஷப்மார்கள்** இரண்டு பேருக்கு சுமார் **40 லட்சம்** கொடுத்து அழைத்து வரப்பட்டு **K.P. யோகன்னானுக்கு பிஷப் அபிஷேகம்** இரகசியமாக நடத்தப்பட்டது. மற்ற நான்கு பிஷப்மாருக்கு இத்தனை கோடிகள் ஏற்பாடு செய்தாரானால் மாடரேட்டராகிய தனக்கு எத்தனை கோடிகளை பிஷப் **K.P. யோகன்னானிடம்** இவர் **பெற்றிருப்பார்** என்று அவர்கள் டையோசிஸ் ஆயர்களே பேசிக்கொள்வதாக கேள்விப்பட்டேன். அந்த அபிஷேக ஆராதனையில் CSI ஒழுங்கின்படி நான் உயிருள்ளவரை CSI சட்ட திட்டங்களை கைகொள்ளுவேன் என்று சத்தியம் செய்யவேண்டும். ஆனால் நடந்தது என்ன ?

**K.P. யோகன்னான்** அவர்கள் பிஷப்பாக பதவி பிரமாணம் எடுத்தபின் அப்படியே தலைகீழாக மாறிவிட்டார். **CSI சபை ஒழுங்கையும் கடை பிடிக்கவில்லை.** தான் முன் கைக்கொண்ட **பெந்தேகோஸ்தே சபை உபதேசத்தின்படியும்** நடக்காமல் **கத்தோலிக்க** உபதேசத்துக்கு ஒப்பான **ஆர்த்தடாக்ஸ்** சபை உபதேசத்தை பின்பற்றி **தூபகலசம்** கையில் ஏந்தி, தான் உருவாக்கிய 6000 **சபைகளை** அந்த தவறான சபை உபதேசத்தை கைகொள்ள **பிலிவர்ஸ் சர்ச்** பாஸ்டர்களை **கட்டாயப்படுத்தினார்.** உடனே 6000 சபைகளும் உடைந்தது. மக்கள் மற்ற சபைக்கு சிதறிபோனார்கள். பாஸ்டர்களின் பாடுதான் பரிதாபமாகிபோனது.



Most Rev. K.P. Yogananan

பலர் தனி சபை துடங்கிவிட்டனர். பல பாஸ்டர்கள் **வருமானம்** இல்லாமல் தனித்து நின்றார்கள். சில பாஸ்டர்களுக்கு **சில மாதங்கள்** சாப்பாட்டு செலவுக்கும் **பிள்ளைகளின்** படிப்புக்கும் என் மனைவியின் **பென்ஷனிலிருந்தும்** மற்ற **சில விசுவாசிகளிடமிருந்தும்** கொஞ்சம் பணம் சேகரித்து உதவினேன். இப்போது அறவே அந்த உதவிகளை நிறுத்திவிட்டேன். **கொரோனா** வியாதி பலருடைய வாழ்க்கையை தாறுமாறாக்கி போட்டது. அதில் பாதிக்கப்ட்ட K.P. யோகன்னானின் **சபை பாஸ்டர்கள்** கைவிடப்பட்ட நிலைதான் மிக பரிதாபமானது.

இப்போது **K.P. யோகன்னானுக்கு கோடி** கணக்கில் **பணம் உண்டு.** சொத்து உண்டு. ஆனால் அரசாங்கம் அவைகளை **வங்கியிலிருந்து எடுக்க முடியாமல்** முடக்கிவிட்டது. K.P.யோகன்னான் அவர்களும் இப்போது முன்புபோல் **வெளியே போய் வருவதில்லை.** எத்தனை பரிதாபம். அவருடைய மகன் பொருப்பில் சகல ஸ்தாகனங்களையும் சபைகளையும், மெடிக்கல் காலேஜ் போன்ற யாவற்றையும் நிர்வகிக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது.

இவைகள் அத்தனைக்கும் காரணம் மரித்த மாடரேட்டர் **K.J. சாமுவேல்** அவர்களாகும். தன் தவறான செயலுக்காக CSI **சினாட்டில்** மண்ணிப்பு கேட்கவில்லை. CSI **மக்களிடமும்** தான் லஞ்ஜம் வாங்கி **தன் அதிகாரத்தை,** தன் கையில் உள்ள **செங்கோலை** லஞ்ஜ பணத்துக்கு விற்றுபோட்டார்கள். இப்போதய CSI சபை **தலை முறை** மக்களுக்கு இவ்விவரம் தெரியாது என்பதால் மாடரேட்டரின் **மரண செய்தியோடு** மாடரேட்டரின் **மறு பக்கத்தை** வெளியிட்டேன். துக்கத்தில் உள்ள மாடரேட்டரின் குடும்பத்தினர் என்னை பொருத்துகொள்ள வேண்டுகிறேன்.

பாவம் செய்த மக்கள் மேல் உள்ள கர்த்தரின் கோபம் தனிந்ததால் அவர் தன் ஜனங்களை மண்ணித்து அவர் கூறும் வார்த்தை........

**............என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன் அழுகையின் சத்தமும் கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை......**

ஏசா 65:19

DECEMBER-2023

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

Annual Subscription:
India - Rs.60/
Foreign - Rs.600/

Return Requested:

Dr.PUSHPARAJ
SALEM - 636 005
INDIA.